DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 11**

| | |
|---|---|
| பெயர் : திரு. பிரபாகரன் | கிராமம்: |
| த/பெ. : திரு. நடேசன் | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 12th day of June, 2024.

( எதிரிகள் 1, 2 ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் சேலம் மாநகரம் அம்மாபேட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.08.2021ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் பணிபுரிந்தபொழுது நிலைய கு.எண். 338/2021 சம்மந்தப்பட்ட வழக்கில் இறந்துபோன பிரபு என்ற பிரேதத்தின்மீது பிரேத பரிசோதனை நடத்த என்னிடம் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்ததை நான் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் பிரேதத்துடன் வேண்டுகோள் கடிதத்தை ஒப்படைத்தேன். பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத விசாரணை முடிந்த பின்னர் அவருடைய குடும்பத்தாரிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். பிரேதத்தின் உடலிலிருந்து எடுத்த லுங்கி ( நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான் ) நான் அதை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அந்த லுங்கி – **சா.பொ.–4**. பிரேதத்திலிருந்து சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை சேலம் வட்டார தடய அறிவியல் துறையில் ஒப்படைத்து, ஒப்புகை சீட்டு பெற்று மருத்துவமனையில் ஒப்படைத்தேன். அது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை(எதிரிகள் தரப்பில்):-**

ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன். என்றால் சரியல்ல.

**மறுமுதல்விசாரணை** - இல்லை.

Sd./-A.M.Ravi,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 12**

| | |
|---|---|
| பெயர் : திரு. அருள்மொழி | கிராமம்: |
| க/பெ. : திரு. ராஜா | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 12th day of June, 2024.

( எதிரிகள் 1, 2 ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது சேலம் மாநகரம் அஸ்தம்பட்டி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 03.08.2021ம் தேதி அம்மாபேட்டை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபொழுது அதிகாலை 3.30 மணிக்கு துளசி, க/பெ. தமிழரசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப் பெற்று, நிலைய கு.எண். 338/2021 சட்டப்பிரிவு 302 இ.த.ச – ஆக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை – **அ.சா.ஆ.–17**. முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் இணைத்து சேலம் நீதித்துறை நடுவர் எண்.5 க்கு துரித தபால் மூலம் அனுப்பினேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். அது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)**:–

அசா.–1 என்னிடம் புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால்

சரியல்ல. அ.சா.–1–டம் வெற்றுத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு பின்னர் அதை வழக்கிற்கு தகுந்தாற்போல் நிரப்பிக்கொண்டோம் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.–17 அதிகாலை 3.30 மணியளவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 03.08.2021 நீதிமன்றத்தால் மதியம் 2.30 மணியளவில் பெறப்பட்டதாக நீதித்துறை நடுவரின் சுருக்கொப்பம் உள்ளது என்றால் ஆமாம். நான் உடனடியாக அனுப்பிவைத்தேன். நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. காவல்நிலையத்தில் வைத்து புகாரும் முதல்தகவல் அறிக்கையும் போலியாக தயாரிக்கப்பட்டதால் அது காலதாமதமாக அனுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுமுதல்விசாரணை</u>** – இல்லை.

Sd./-A.M.Ravi,
I Additional District Judge,
Salem.